


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 267 | 4 Pages | 25.4.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 267 | 4 பக்கங்கள் | 25.4.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று**

**விளக்கம்:**

**தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவம் அல்லாத தீயச்செயல்களைச் செய்தல், புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளை வலைவீசிப் பிடித்தலைப் போன்றது.**

## போப் பிரான்சிஸ் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி



ரோம், ஏப்.25

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர், போப் ஆண்டவர்(வயது 88). கத்தோலிக்க திருச்சபையின் இந்த உச்சபட்ச பதவியில் போப் பிரான்சிஸ் இருந்து வந்தார். அர்ஜென்டினாவை சேர்ந்த இவர் கடந்த 2013ம் ஆண்டு மார்ச் 13ந் தேதி போப் ஆண்டவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

12 ஆண்டுகளாக இந்த பதவியில் இருந்த அவருக்கு முதுமை காரணமாக கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டிருந்தது. பின்னர் சுவாசக்கோளாறு காரணமாக கடந்த பிப்ரவரி 14ந் தேதி இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள ஜெமெல்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு நடந்த பரிசோதனையில் நிமோனியா பாதிப்பு இருந்தது தெரியவந்தது. இதற்காக தீவிர சிகிச்சை பெற்ற அவர் 38 நாட்களுக்குப்பின் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். வாடிகனில் சமீபத்தில் நடந்த புனித வியாழன், புனித வெள்ளி பிரார்த்தனைகளிலும் போப் பிரான்சிஸ் பங்கேற்றார்.

இந்த நிலையில் போப் பிரான்சிஸ் கடந்த 21ந்தேதி காலமானார். வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக அவர் உயிரிழந்தார். போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலகத்தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அவரின் இறுதிச்சடங்கு 26ந்தேதி(சனிக்கிழமை) நடைபெற உள்ளது.

இறுதிச்சடங்கிற்கு முன் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக போப் பிரான்சிஸ் உடல் ரோம் நகரில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

## அலுமினிய முலாம் பூசி தங்கம் கடத்தல் 2 பேர் கைது



கொழும்பு, ஏப்.25

இலங்கையின் தலைமன்னார் உருமலையில் இருந்து தமிழகத்தின் ராமேஸ்வரத்திற்கு தங்கம் கடத்தப்படுவதாக இலங்கை கடற்படைக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, இந்தியா, இலங்கை இடையேயான சர்வதேச கடற்பகுதியில் இலங்கை கடற்படையினர் நேற்று தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, படகில் அலுமினிய முலாம் பூசி 8 கிலோ தங்கம் கடத்தி வரப்பட்டதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, படகில் தங்கத்தை கடத்தி வந்த 2 பேரை கைது செய்த கடற்படையினர் பறிமுதல் தங்கத்தைகாங்கேசன்துறைசுங்கத்துறைஅதிகாரிகளிடம்ஒப்படைத்தனர்.

## காஷ்மீர் பயங்கரவாத தாக்குதல்: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கண்டனம்



ஜெருசலேம், ஏப்.25

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் நகரின் பைசாரன் மலைப்பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர்.

மினி சுவிட்சர்லாந்து என்று அழைக்கப்படும் அப்பகுதியில் நடந்த இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாககொண்டுசெயல்படும்லஷ்கர்இதொய்பாபயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பல்வேறு நாடுகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில்,காஷ்மீர்பஹல்காம்பயங்கரவாததாக்குதலுக்குஇஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்வெளியிட்டுள்ளஎக்ஸ்பதிவில்,ஜம்முகாஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலில் பலர் கொல்லப்பட்டிருப்பது, காயமடைந்திருப்பது எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது. இந்த தாக்குதலில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறோம். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவுக்கு இஸ்ரேல் உறுதுணையாக இருக்கும்' என தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்: காசாவில் 17 பேர் பலி

டெல் அவிவ், ஏப்.25

இஸ்ரேல்காசா இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாகஒழிக்கும்நோக்கிலும்காசாமுனையில்இஸ்ரேல்தொடர்ந்து தரைவழி, வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த போாில் பாலஸ்தீனத்தை சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். 2 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்று வரும் போரில், காசாவில் இதுவரை 51 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில்காசாவில்பாலஸ்தீனத்தைச்சேர்ந்த17பேர்கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் என அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. மேலும், இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் தரைமட்டமானகட்டடஇடிபாடுகளைஅகற்றும்பணிகளில்ஈடுபட்டிருந்த புல்டோசர் உள்ளிட்ட கனரக வாகனங்கள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

# பயங்கரவாத அமைப்புகளை இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும் முதல்அமைச்சர்

சென்னை, ஏப்.25

தமிழக சட்டசபையில் கேள்வி நேரம் முடிந்ததும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுந்து, ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் பலியானதற்கு இரங்கல் தெரிவித்து பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், "ஜம்முகாஷ்மீர் மாநிலம் பெஹல் காமில் நேற்று நடந்த பயங்கரவாத தாக்குதலில் அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர். அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தாக்குதல் நிகழ்வு மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். இதற்கு பயங்கரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது. பயங்கரவாத, தீவிரவாத அமைப்பைஇரும்புக்கரம்கொண்டு ஒடுக்க வேண்டும். இந்த சம்பவத்தில் 26 பேர் பலியாகியுள்ளனர்.

தமிழகத்தை சேர்ந்த சிலரும் காயம் அடைந்திருக்கிறார்கள். இந்த தகவலை கேள்விப்பட்டவுடன் அவர்களை பத்திரமாக மீட்டுக்கொண்டுவர உத்தரவிட்டேன். அதற்கான உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி, காயம் அடைந்த தமிழர்களுக்கு சிகிச்சை அளிப்பதை உறுதி செய்து, அவர்கள் பத்திரமாக அழைத்துவரப்படுவார்கள். இதுபோன்ற செயல்களை அறவே தடுத்து நிறுத்த வேண்டும். பயங்கரவாத தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைவரும் எழுந்து நின்று 2 நிமிடம் அஞ்சலி செலுத்த வேண்டும் என்று சபாநாயகர் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் பேசினார்.



அதனைத் தொடர்ந்து, சபாநாயகர் அப்பாவு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அனைத்து உறுப்பினர்களும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினார்கள்

இதனைத்தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல் சம்பவத்துக்கு முதல் அமைச்சர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சட்டசபையில் பேசிய அவர், "ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பெஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தையும், பலியானவர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் பயங்கரவாதிகள் மிகவும் கொடூரமாக தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இதுவரை 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்ட சம்பவம் நமக்கு அதிர்ச்சியளித்திருக்கிறது.

ஜம்மு காஷ்மீரில் பெஹல்காமுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து மட்டுமல்ல, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் காஷ்மீருக்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். பைசரான் பகுதியில் மனிதாபிமானமற்ற வகையில் அப்பாவி மக்கள் மீதான தாக்குதலுக்கு இந்திய மண்ணில் அறவே இடம் இல்லை. இது போன்ற கடுமையாக தாக்குதல் கண்டிக்கத்தக்கது.

இது மிகவும் மோசமான தாக்குதல் என்று ஜம்மு காஷ்மீர் முதல்மந்திரி ஒமர் அப்துல்லா தெரிவித்திருக்கிறார். இத்தாக்குதலை ஒரு பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. பயங்கரவாத அமைப்புகளை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.

காஷ்மீர் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளது.

தேவையான உதவிகளை செய்யவும், மருத்துவ வசதிகளை செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அனைவரும் தேவையான சிகிச்சை வழங்கவும் உத்தரவிட்டப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு குல்ஹாமில் 8 பக்தர்களும், 2019 ஆம் ஆண்டில் புல்வாமாவில் 40 ராணுவ வீரர்களும் கொல்லப்பட்டனர்.

இது போன்ற தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் துணை நிற்பார்கள்" என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்

## சுண்டக்காம்பாளையம் அரசு பள்ளியில் மன்ற நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா



சுண்டக்காம்பாளையம் அரசு பள்ளியில் மன்ற நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா சுண்டக்காம்பாளையம் அரசு பள்ளியில் மன்ற நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ஊத்துக்குளி வட்டார கல்வி அலுவலர்2 திரு விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் திரு சு.காளியப்பன் அனைவரையும் வரவேற்றார். ஜூனியர் ரெட் கிராஸ் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அறிவியல் மன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஆசிரியர் காயத்திரி கடிகாரம் பரிசு வழங்கினார். எலைட் பள்ளிக்கு தேர்வான மாணவர் லிங்கேஸ்வரனுக்கு வட்டார கல்வி அலுவலர் விசுவநாதன் பரிசு வழங்கி பாராட்டினார். ரங்கநாதன் ஆசிரியர் நன்றிகூற விழா இனிதே நிறைவுற்றது.

## துல்லியமான, பாதுகாப்பான அறுவை சிகிச்சைக்கு சென்னையில் முதன்முறையாக ஓஆர்ம் சாதனம் தொடக்கம்: காவேரி மருத்துவமனை தகவல்



சென்னை,ஏப்.25

அறுவை சிகிச்சைதுல்லியமாகவும், பாதுகாப்பாகவும் செய்ய சென்னையில் முதன்முறையாக ஓஆர்ம் சாதனம் தொடங்கப்பட்டுள்ளதாக காவேரி மருத்துவமனை தெரிவித்துள்ளது. காவேரி மருத்துவமனை மேம்பட்ட மூளை, முதுகுத்தண்டு மற்றும் எலும்பியல் அறுவை சிகிச்சைகளுக்காக ஓஆர்ம் (OArm) சாதனத்தை சென்னையில் முதன்முறையாக அறிமுகம் செய்துள்ளது.இதன்அறிமுகநிகழ்ச்சிசென்னை கிண்டியில் உள்ள தனியார் விடுதியில் நடந்தது. இஸ்ரோ தலைவர் நாராயணன் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஓ – ஆர்ம் சாதனத்தை தொடங்கி வைத்தார்.

இதை தொடர்ந்து, காவேரி மருத்துவமனையின் மூளை மற்றும் முதுகுத் தண்டிற்கான அறுவை சிகிச்சை தலைமை நிபுணரும், நரம்பு அறிவியல் துறையின் இயக்குநருமான மருத்துவர் ரங்கநாதன் ஜோதி சாதனம் பற்றி கூறியதாவது: செயற்கை நுண்ணறிவால் மேற்கொள்ளப்படும் 2டி மற்றும் 3டி இமேஜிங் வழியாக இயங்கும் ஓ – ஆர்ம் சாதனம், மிக அதிக துல்லியத்துடனும், பாதுகாப்புடனும் அதிக சிக்கலான மூளை, முதுகுத்தண்டு மற்றும் எலும்பியல் அறுவைசிகிச்சை செயல்முறைகளை திறம்பட மேற்கொள்ள அறுவைசிகிச்சைநிபுணர்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதில் உள்ள மிக நவீன மொபைல் இமேஜிங்செயல்தளமானது,அறுவை சிகிச்சையின்போது 360 டிகிரி சிடி போன்ற தோற்றப் படங்களை வழங்கும். மிக நுட்பமான முதுகுத்தண்டு அறுவை சிகிச்சையின்போது ஸ்குரூக்கள் மற்றும் செயற்கை இம்பிளாண்ட்கள் மிகத் துல்லியமாக பொருத்தப்படுவதை இச்சாதனம் உறுதி செய்கிறது. கையில் ஒரு 3டி படத்தை வைத்துக் கொண்டு அறுவைசிகிச்சையை செய்வது போன்றது இது. சிக்கலான முதுகுத்தண்டு ஊனத்தை சரிசெய்தல், புற்றுக்கட்டிகளை வெட்டி அகற்றுதல் மற்றும் மிக குறைவான ஊடுருவலுள்ளசெயல்முறைகள்ஆகியவற்றை இந்த சாதனத்தின் மூலம் அதிக துல்லியத்தோடும், நம்பிக்கையுடனும் இப்போது செய்ய முடியும்.

குறிப்பாக மூளைநரம்பியல் அறுவை சிகிச்சையில், ஆழமான இடத்திலிருக்கிற மூளைப் புண்கள், மூளைக் காயம், மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் சிகிச்சைக்கு ஆதரவளிக்கிறது.எலும்பியல்சிகிச்சைகளில், இடுப்புக்கூடு எலும்பு முறிவுகளுக்கான சிகிச்சைகளிலும், சிக்கலான எலும்பு மறுக்கட்டமைப்புகளிலும், மூட்டுகளில் திருத்தங்கள் செய்வதற்கும், எலும்பு புற்றுநோய்களை துல்லியமாக அகற்றுவதற்குமான சிகிச்சைகளிலும் இது உதவுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும்: சட்டசபையில் ஆர்.கே.நகர் எம்எல்ஏ எபினேசர் கோரிக்கை

சென்னை, ஏப்.25

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது ஆர்.கே.நகர்எம்எல்ஏ ஜே.ஜே.எபினேசர்என்கிற ஜான்எபினேசர் (திமுக) பேசுகையில், "என்னுடைய ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை மற்றும் துர்காதேவி நகர் ஆகியவற்றை சுற்றியுள்ள பகுதிகளில் மாறி வரும் மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாக, மின் பற்றாக்குறை என்பது வெகுவாக நிலவுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அந்த பகுதிகளில் துணை மின் நிலையங்களை அமைக்க அமைச்சரிடம் கடிதம் வழங்க இருக்கிறேன். இந்த பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாணும் வண்ணம், அப்பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா?" என்றார்.



இதற்கு பதிலளித்து அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசுகையில், "தமிழ்நாடு மின்சாரத் துறையினுடைய வரலாற்றில், இந்த நான்காண்டுகளில், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் அதிக பணிகளைச் செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின். அதுகுறித்து உறுப்பினருக்கும் நன்றாக தெரியும். நானே அந்த பகுதிகளுக்கு நேரில் சென்றபோது, சட்டமன்ற உறுப்பினரையும் உடன் அழைத்துச் சென்றேன். அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முழுவதுமாக பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.உறுப்பினர்சுட்டிக்காட்டியிருக்கிற துணை மின் நிலையம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது" என்றார்.



# திருவிக நகர் தொகுதி வார்டு எண் 71ல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்: சட்டசபையில் தாயகம் கவி எம்எல்ஏ வலியுறுத்தல்

சென்னை, ஏப்.25

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திரு.வி.க. நகர் தாயகம் கவி (திமுக) பேசுகையில், “திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 71ல், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா?” என்றார். இதற்கு பதில் அளித்து அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசுகையில், “தமிழ்நாடு முதல்வர், 708 நகர்ப்புற



நல வாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று விதி 110ன்கீழ் அறிவித்து, 500 மருத்துவமனைகளை திறந்து வைத்திருக்கிறார். மேலும், 208 மருத்துவமனைகள் முழுமைபெற்று திறக்கும் தருவாயில் இருக்கின்றன.

சென்னையைப் பொறுத்தவரை, 200 வார்டுகளிலும், வார்டுக்கு ஒன்று வீதம் இன்றைக்கு மருத்துவமனைகள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே, 140 இடங்களில் திறந்து வைக்கப்பட்டன. மீதமுள்ள 60 இடங்களிலும் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. உறுப்பினர் தாயகம் கவி சொன்ன வார்டில் இந்த மருத்துவமனை அமையாமல் இருந்தால், அவர் உரிய இடத்தை காட்டினால், நாளையே அந்த மருத்துவமனை அங்கு அமைவதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்படும்” என்றார்.

# பணிநிரந்தரம் கோரி அரசு கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் 3வது நாளாக போராட்டம்

சென்னை, ஏப்.28

தமிழகத்தில் உள்ள 164 அரசு கலை அறிவியல் கல்லூரிகள் மற்றும் 9 கல்வியியல் கல்லூரிகளில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகின்றனர். நீண்ட காலமாக பணியாற்றி வரும் தங்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்நிலையில், கௌரவ விரிவுரையாளர்களுக்கு கடந்த 2019 முதல் மாத ஊதியத்தை ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்ற உயர்நீதி மன்ற தீர்ப்பை

அமல்படுத்தக்கோரியும், கௌரவ விரிவுரையாளர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசு கலைக் கல்லூரியுஜிசிதகுதிபெற்ற கவுரவவிரிவுரையாளர்கள் சங்கம் சார்பில் கவுரவ விரிவுரையாளர்கள் சென்னை



சைதாப்பேட்டையில் உள்ள மாநில கல்லூரி கல்வி ஆணையர் அலுவலகம் முன்பு கடந்த திங்கட்கிழமை தொடர் போராட்டத்தை தொடங்கினர். அவர்களின் தொடர் போராட்டம் நேற்று 3வது நாளாக நீடித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட 350 பேரை கைதுசெய்யப்பட்டதாக அச்சங்கத்தின் நிறுவனர் சிவகுமார் தெரிவித்தார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலையில் கைதான ரவுடி நாகேந்திரன் சிகிச்சை முடிந்து சிறையில் அடைப்பு

சென்னை, ஏப்.25

சென்னை வியாசர்பாடியை சேர்ந்தவர் ரவுடி நாகேந்திரன். கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர். இவர், வேலூர் மத்திய சிறையில் கடந்த 3 ஆண்டுகளாக தண்டனை அனுபவித்து வருகிறார். இந்நிலையில், சென்னையில் நடந்த ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில்நாகேந்திரனுக்கு தொடர்பு

இருப்பது தெரியவந்ததால் அவரை போலீசார் கைது செய்தனர். இதற்கிடையில், கல்லீரல் பாதிப்புக்காக ரவுடி நாகேந்திரன், கடந்த ஜனவரி மாதம் ராணிப்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ராணிப்பேட்டை தனியார் மருத்துவமனையில் 3





மாதமாக சிகிச்சை பெற்று வந்த ரவுடி நாகேந்திரன், சிகிச்சை முடிந்து நேற்று முன்தினம் மாலை வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# எடப்பாடி பழனிசாமி கோரிக்கையை ஏற்ற சபாநாயகர் அப்பாவு

சென்னை, ஏப்.25

பேரவையில் எதிர்க் கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, “வணிகவரி, பத்திரப்பதிவு துறை மற்றும் போக்குவரத்து துறைக்கான கொள்கை விளக்க புத்தகம் நேற்று இரவு 9 மணிக்குத்தான் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இரவு கொடுத்தால், எப்படி படித்துவிட்டு காலையில் விவாதத்தில் பேச





முடியும். அதனால் ஒரு நாள் முன் புத்தகம் வழங்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், “இதுபற்றி பேரவை நடப்பதற்கு முன் ஆலோசித்தேன். அப்போது, கொள்கை விளக்க புத்தகம் 2 நாளுக்கு முன் எம்எல்ஏக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கூறி இருந்தேன். இனி இதுபோல் நடக்காது ” என்றார்.

# கோயம்பேடு காய்கறி சந்தையில் 1 கிலோ எலுமிச்சை பழம் ரூ.120க்கு விற்பனை



சென்னை, ஏப்.: கோயம்பேடு காய்கறி சந்தையில் 1 கிலோ எலுமிச்சை பழம் அதிகபட்சம் ரூ.120க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.70க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், கோடை வெயிலின் தாக்கமே இந்த விலை உயர்வுக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்துள்ளார்.

# சென்னை பள்ளிக்கரணையில் ஸ்ரீ நீலா கார்டன் பிரம்மாண்ட திறப்பு விழா

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை 189வது வார்டு பகுதியில், முன்னாள் மாமன்ற உறுப்பினர் சி. ரங்கன் அவர்களின் அருளாசியுடன், அதிமுக சென்னை புறநகர் மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் சி.ஆர். சூர்ய பிரபா தலைமையில், பள்ளிக்கரணையில் முதன்மையாக அழகிய பொலிவுடன் சுற்றுப்புற முழுவதும் மரம் செடி கொடிகளால்

சூழ்ந்துள்ள, வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வெளிப்புற அமைப்புடன் கூடிய பிரம்மாண்டமான ஸ்ரீ நீலா கார்டன் திருமண கார்டன் மண்டபம், முன்னாள் மாமன்ற உறுப்பினர் சி. ரங்கன் அவர்களின் அருள் ஆசியுடன் கூடிய, சென்னை புறநகர் மாவட்டம் மகளிர் அணி இணைச் செயலாளர் சி. ஆர். சூர்ய பிரபா அவர்களின் குழந்தைகள் ரிப்பன் வெட்டி திறப்பு விழா செய்தார்கள். பி. சம்பத் யாதவ், ஆர் நீலாரங்கன், சீ. மணவாளன் யாதவ், பி.சி. டில்லியாதவ் ஆகியோர்களும் வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்கள்.

மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் மாமன்ற உறுப்பினர் சி.ரங்கன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு அனைவரும் மலர் தூவி மரியாதை செய்தார்கள். இந்த திறப்பு விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும்,

சென்னை புறநகர் மாவட்ட கழக செயலாளருமான கந்தன், பகுதி கழக செயலாளர் வி. குமார் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் ,பகுதி கழக





நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பொதுநல சங்க உறுப்பினர்கள்,

உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சி .ஆர். தொண்டு அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ நீலா திருமண மண்டபத்தின் சார்பாக H.ஜெயக்குமார் நன்றி தெரிவித்தார்.

# வத்தலகுண்டு பேரூராட்சி புதிய கட்டிட அலுவலக பணி விறுவிறு

வத்தலகுண்டு,ஏப்.25

வத்தலகுண்டு பேரூராட்சி புதிய அலுவலக கட்டிடப் பணிகள் விறுவிறுப்பாக கட்டப்பட்டு வருகிறதை அதிகாரிகள் பார்வையிட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சியில் மூலதனமானிய நிதி திட்டத்தின் கீழ் புதியதாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூ.1 கோடியே 25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து



கடந்த சில தினங்களுக்கு முன்பு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ பெரியசாமி,பழனி எம்எல்ஏ செந்தில்குமார்,மாவட்ட கலெக்டர் சரவணன் ஆகியோர் பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடப் பணிகள் மலமலவென விறுவிறுப்பாக பணி நடைபெற்று வருகிறது. பணி நடைபெறுவதனை இளநிலை பொறியாளர் கருப்பையா பார்வையிட்டார்.

இந்நிகழ்வின்போது பேரூராட்சி செயல் அலுவலர் சரவணகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் சிதம்பரம்,திமுக நகர செயலாளரும் வார்டு கவுன்சிலருமான சின்னத்துரை, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தர்மலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ஆலங்குளம் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டங்கள்: கலெக்டர் ஆய்வு

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளையும், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் மேலகுத்தப்பாஞ்சான் ஊராட்சியில் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும். வருகைப்பதிவேடு குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும். ஆலங்குளம் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம்



குறைகளை கேட்டறிந்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என உரிய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கே.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு தனது புதுமை தொழில் முயற்சி மையம் தொடக்கம்

நாமக்கல், ஏப்.25

கே.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு தனது புதுமை மற்றும் தொழில் முயற்சி மையமான KSRCE NEO (Council for Innovation and Incubation)-வை 16 ஏப்ரல் 2025 அன்று மிகச் சிறப்பாக தொடங்கியது. மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கும், புதிய யோசனைகளுக்கும் உறுதுணையாக இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விழா, ரிப்பன் வெட்டும் நிகழ்வுடன் ஆரம்பமாகி, மாணவர்களின் புதுமை மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஓர் உரிய தளமாக திகழும் புதிய கட்டமாக அமைந்தது. திரு. R.ஸ்ரீனிவாசன், கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் தலைவர், இந்த நிகழ்வை மிகவும் பாராட்டினார். திரு.K.S. சச்சின், துணைத் தலைவர், குழுவினரின் ஒற்றுமையும், கடின உழைப்பும் இந்த மையத்தை உருவாக்க காரணமாக இருந்தது என்று குறிப்பிட்டார். விழாவின் சிறப்பு விருந்தினராக சிவகுமார் பழனிசாமி, StartupTN (தமிழக அரசு) நிறுவனத்தின் துணைத் தலைவர் கலந்து கொண்டு, மாணவர்களிடம் தொழில் தொடங்கும் தைரியம் மற்றும் புதுமை முக்கியத்துவம் குறித்தும் பேசினார். மாணவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும் என்றும், தவறுகளிலிருந்தும் கற்றுக்கொள்ள



வேண்டும் என்றும் ஊக்கமளித்தார். அதே நேரத்தில், உயிர்மருத்துவப் பொறியியல் துறை இறுதி ஆண்டு மாணவரும், என்ற ஸ்டார்ட்அப் நிறுவனத்தின் நிறுவுவருமான திரு. பரத்குமார் மற்றும் அவரது குழுவினரையும், கல்லூரியிலேயே நிறுவனம் தொடங்கியதற்காக சிறப்பாக பாராட்டினார். பேராசிரியர் வி. மோகன் (நிர்வாக இயக்குனர்), முதல்வர் டாக்டர் எம். வெங்கடேசன், துணை முதல்வர்கள், துறை தலைவர்கள், ஆசிரியர்கள்

மற்றும் மாணவர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு இந்த சிறப்பு நிகழ்வை சிறப்பித்தனர். KSRCE NEO மையம், மாணவர்களுக்கு தொழில் முனைவோராக மாற ஒரு சிறந்த தளமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி

தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பாக மறைந்த முன்னாள் சட்டப் பேரவை கொரடாவும் தென்காசி சட்டமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் மாவட்ட செயலாளருமான வல்லத்தின் அடையாளமாகவும் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற காமு கதிரவன் மறைந்த 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் தென்காசி ஒன்றிய குழு பெருந்தலைவர் ஷேக் அப்துல்லா தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் வல்லம் திவான் ஒலி கிழக்கு ஒன்றிய செயலாளர்



அழகு சுந்தரம் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கரிசல் வேலுச்சாமி மாவட்ட தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் ஷபிக் அலி வழக்கறிஞர் செல்லத்துரை உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்

# உலக பூமி தினத்தையொட்டி கோகிலாபுரம் நடுநிலைப் பள்ளியில் தோட்டக்கலை மாணவிகள் விழிப்புணர்வு

கம்பம்,ஏப்,25

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் திருச்சி தோட்டக்கலை கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு மாணவிகள் இப்சிதா மகன்தா, ஜெயஸ்ரீ, காஞ்சனா, கரணிப்பிரியா,காவியாஸ்ரீ, கீர்த்தி,நல்லி, கனிஷ்கா ஆகியோர் தேனி மாவட்டம் கம்பம் வட்டாரத்திற்கு ஊரக தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்தின் கிழ் வருகை புரிந்து கம்பம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அறிவுறுத்தலின் படியும் தோட்டக்கலை




அலுவலர் ஆலோசனை பேரில், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மேற்பார்வையில் கோகிலாபுரத்தில் ஸ்ரீ என்.எம்.ஆர் சுப்பராமன் நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு மரம் நடுதலின் பயன் மற்றும் புவியினை காக்க வேண்டியது நமது ஒவ்வொருவுடைய கடமை என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நாளை முதல் கோடை விடுமுறை... ஜூன் 2ம் தேதி பள்ளிகள் திறப்பு



சென்னை ஏப்.25

அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9ம் வகுப்பு மாணவர்களுக்கான பள்ளி இறுதி தேர்வு நாளையோடு முடிவடைகிறது. இதையடுத்து 25ந்தேதி முதல் மாணவர்களுக்கு கோடை விடுமுறை விடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் பணியினை முடித்து தேர்வு முடிவினை வெளியிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக ஆசிரியர்களுக்கான பள்ளி இறுதி வேலை நாள் 30ந்தேதி என்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2025, 2026ம் கல்வியாண்டில், அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் கோடை விடுமுறை முடிந்து வருகிற ஜூன் மாதம் 2ந்தேதி திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 2ந்தேதி பள்ளிகள் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுரை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

# கலவையில் திடீரென பொதுமக்கள் சாலை மறியல்



ராணிப்பேட்டை மாவட்டம் கலவை சென்னசமுத்திரம் சாலையில் கலவை கிளை நூல் நிலையம் மற்றும் பேரூராட்சி இரவு தங்கும் விடுதி மற்றும் அப்பகுதியில் 28க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 65 ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். அப்பகுதியைச் சேர்ந்த சிலர் ஆக்கிரமிப்புகள் அகற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடத்தில் மனு அளித்துள்ளனர். இதை அடுத்து மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில், நெடுஞ்சாலைத் துறை ஆய்வாளர் அருணா, இன்றுகாலைகுடியிருக்கும் வீட்டின் உரிமையாளர்களுக்கு 7 நாட்களுக்குள் இடம் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் அதனால் இடத்தை காலி செய்ய வேண்டும் எனகடிதம் வாங்கியுள்ளார். இதில், பொதுமக்கள் சுமார் 65 ஆண்டுகளாக குடும்ப நடத்தி வருகிறோம் தற்போது திடீரென ஆக்கிரமிப்பு அகற்ற வேண்டும் என கூறியதால் பேரூராட்சி மன்ற உறுப்பினர் நித்யா சக்தி தலைமையில், கலவை சென்னசமுத்திரம் சாலையில் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கலவை காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் அமரேசன், பாமக மாவட்ட செயலாளர் சண்முகம், ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர், கலவை தாசில்தார் சுரேஷ், வருவாய் ஆய்வாளர் நடராஜன்

ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று ஆக்கிரமிப்பை அகற்றுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர், அதிகாரிகள் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்து பொதுமக்களுக்கு சமூகத்தீர்வு ஏற்படும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதால் சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். அதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது.

# தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகில் கோடைகால தண்ணீர் பந்தல் மற்றும் ஆவின் பாலகம் திறப்பு



தஞ்சாவூர்,ஏப்.25

தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகில் ஆம்னி பஸ் நிறுத்தம் எதிரில் மாநகர திமுக இளைஞரணி துணை

அமைப்பாளர் திருஞானசம்பந்தம் ஏற்பாட்டில் கோடைகால தண்ணீர் பந்தல் மற்றும் ஆவின் பாலகம் திறப்பு விழா நடந்தது விழாவிற்கு மாநகர திமுக செயலாளர் மாநகராட்சி மேயர் சன் இராமநாதன் தலைமை தாங்கினார் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் திருஞானசம்பந்தம் வரவேற்றார் விழாவில் திருவையாறு சட்டமன்ற உறுப்பினரும் தஞ்சை மாவட்ட திமுக செயலாளருமான துரை சந்திரசேகரன் கலந்து கொண்டு கோடைகால தண்ணீர் பந்தல் மற்றும் புதிய ஆவின் பாலகத்தை திறந்து வைத்தார். தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி கே ஜி நீலமேகம் முன்னிலை வகித்தார். விழாவில் மாவட்ட துணை செயலாளர் கனகவள்ளி பாலாஜி பகுதி செயலாளர்கள் டி. எஸ். கார்த்திகேயன், நீலகண்டன், சதாசிவம், மாநகர தொண்டரணி அமைப்பாளர் எஃப். சி. ராஜ், மாநகராட்சி உறுப்பினர்கள் ஆனந்த், தமிழரசி ராஜா, ஷர்மிளா ராஜா, ஐடி பிரிவு ராஜா, சீனிவாசன் மாவட்ட பிரதிநிதி உதேக், மாநகர இளைஞர் அணி துணை செயலாளர்கள் தஞ்சை பிரபு, சதீஷ்குமார், பிரசாத் கிறிஸ்டோபர், மதிபாலன், விஜய், வட்ட செயலாளர்கள் ராஜ்குமார், மனோகர், சுரேஷ், ரோச், பிரமுகர்கள் கேசவன், குமார், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# காஷ்மீரில் இறந்தவர்களுக்கு கெலமங்கலத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் கண்ணீர் அஞ்சலி



ஓசூர், ஏப். 25

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் கெலமங்கலம் பேருந்து நிலையத்தில் காஷ்மீர் மாநிலத்திற்கு சுற்றுலா சென்ற மக்களை பககம் என்கிற

இடத்தில் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டு 20 பேர் இறந்துள்ளதை கண்டித்து, இந்த பயங்கரவாத செயலுக்கு கெலமங்கலம் மேற்கு ஒன்றிய தலைவர் சி.ராஜேஷ்குமார் தலைமையில் மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் என பலர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு மற்றும் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்,

இந்த நிகழ்வில் மாநில செயற்குழு பாலகிருஷ்ணன், கெலமங்கலம் பாஜக கட்சி மூத்த நிர்வாகி ஆனந்த், ஒன்றிய பொதுச் செயலாளர்கள் ஆனந்த் ரெட்டி, ராஜூ, மற்றும் குர்ரப்பா, நாகபூஷ்ணம், தினேஷ், ரங்கநாத், இராமகிருஷ்ணன், மாதேஷ், சிவப்பா, ஒன்றிய துணை தலைவர் முனிராஜ், ஐ.ஆர். ஸ்ரீநிவாஸ், கே.என். முனிராஜ், மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

# கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் மாணவ மாணவியருக்கான பட்டமளிப்பு விழா



புதுக்கோட்டை, ஏப்.25

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகிலுள்ள கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் மழலையர், மாணவ மாணவியருக்கான பட்டமளிப்பு விழா, ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்விற்கு பள்ளியின் தாளாளர் மேசியா சந்தோஷம் தலைமை தாங்கினார். அனவயல் அரசு மேல் நிலை பள்ளி தமிழாசிரியை சண்முகவள்ளி, யூகேஜி மழலையர் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்தி பேசினார் பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் பட்டம் பெறுவதை பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள்நி கழ்ச்சியில் .தொடர்ந்து, ஆசிரியர்களுக்கும் மாணவ ,மாணவியருக்கு பரிசுகள் வழங்கியும் பாரதியார் பல்கலைக்கழகம் கோவை. முனைவர் ராஜதுரை, புதுகைபாவை இலக்கிய பேரவை செயலாளர் சுசிலா தேவி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் காந்தி சுப்பிரமணியன், அக்வா ஆலோசகர் ரமேஷ், கே எம் சி குவாலிட்டி உதவி மேலாளர் ஸ்ரீதர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெ எம் டி பட்டிணம் ஜாகீர் உசேன், கட்டுமாவடி இளையராஜா, உள்ளிட்டோர் மாணவ மாணவியர் ஆசிரியர்களையும் பரிசு மற்றும் பட்டம் பெற்றவர்களையும் வாழ்த்தி பேசினார்கள் பள்ளிக்குழந்தைகளின் கலை நிகழ்ச்சியில் சிறப்பாக நடைபெற்றது. மகிழ்ச்சியுடன் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். .குழந்தைகளின் கண்ணைக் கவரும் வண்ணமயமான நடனங்கள் மற்றும் மழலையர் குழந்தைகளின் நடனங்கள் என விழா களை கட்டியது.நிறைவாக தலைமை ஆசிரியை பானுமதி நன்றி கூறினார்

# திண்டுக்கல்: அண்ணனை கொலை செய்ய முயன்ற தம்பிக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை

திண்டுக்கல் ஏப்.25

திண்டுக்கல் மாவட்டம், அம்பாத்துரை பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு வெள்ளோடு பகுதியைச் சேர்ந்த சமாதான பிரபு (38) என்பவரை அவரது தம்பி சாம்சன் (35), அரிவாளால் வெட்டி கொலை முயற்சி செய்த வழக்கில் அம்பாத்துரை காவல் நிலைய போலீசார் சாம்சனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில்,

திண்டுக்கல் மாவட்ட எஸ்.பி. பிரதீப் அறிவுறுத்தலின்படி, அம்பாத்துரை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வசந்தகுமார், நீதிமன்ற ஏட்டு திருமுருகன் மற்றும் அரசு வழக்கறிஞர் குமரேசன் ஆகியோரின் முயற்சியால் திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி குற்றவாளி சாம்சனுக்கு 10 ஆண்டு 4 மாதங்கள் சிறை தண்டனை மற்றும் ரூ.9 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

# நெல்லை: பணம் பறிக்கும் நோக்கத்துடன் மிரட்டிய 3 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது

திருநெல்வேலி ஏப்.25

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, படப்பக்குறிச்சி, காமராஜர் தெருவில் வசித்து வரும் சங்கரலிங்கம் மகன் பாலசுப்பிரமணியன் மற்றும் இரண்டு நபர்களை திருநெல்வேலி, கொக்கிரக்குளத்தைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் மகன் சின்னகுட்டி (26), பெருமாள் மகன் அழகுமுத்து(22), மற்றும் ஆறுமுகம் மகன் சங்கர்கணேஷ்(27) ஆகியோர் பாளையங்கோட்டை, வண்ணாரப்பேட்டை, தெற்கு பைப்பாஸ் ரோடு, ரோஸ்மேரி மிஷன் மருத்துவமனை அருகே ஏப்ரல் 4ம் தேதி பணம் பறிக்கும் நோக்கத்துடன் மிரட்டியுள்ளனர்.

மேற்சொன்ன வழக்கில் சம்பந்தப்பட்டு பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்த சின்னகுட்டி, அழகுமுத்து, சங்கர்கணேஷ் ஆகிய 3 பேரும், திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை ஆணையர் (கிழக்கு) வினோத் சாந்தாராம், போலீஸ் உதவி கமிஷனர் (பாளையங்கோட்டை சரகம்) சுரேஷ், பாளையங்கோட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் தில்லை நாகராஜன் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி ஆணைப்படி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டனர்.

# நெல்லை: கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த 2 பேர் கைது

திருநெல்வேலி ஏப்.25

நெல்லை மாவட்டம், பாப்பாக்குடி பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் ஆழ்வார் தலைமையிலான காவல்துறையினர்நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது செங்குளம் விலக்கு அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த செங்குளத்தைச் சேர்ந்த தங்கமாரியப்பன் (வயது 29), ஆதிமூலபெருமாள் (40) ஆகிய இருவரையும் போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடிய 60 கிராம் கஞ்சாவை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரிய வந்தது. இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு தங்கமாரியப்பன், ஆதிமூலபெருமாள் இருவரையும் நேற்று கைது செய்தார். மேலும் அவர்களிடமிருந்து 60 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தனர்.

# அப்பாவி இந்தியர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தேன்: வைகோ வேதனை



சென்னை ஏப்.25

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

காஷ்மீரில் பஹல்காம் சுற்றுலா தலத்தில் அப்பாவி இந்தியர்கள் 26 பேர் பயங்கரவாதிகளால் கொடூரமாகக் கொல்லப்பட்ட செய்தி அறிந்தவுடன் அதிர்ச்சியும், பதற்றமும் ஏற்பட்டது.


நான்கு நாட்களுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்ட இளம் தம்பதிகள் தேனிலவு சென்ற இடத்தில் கோரமாக கொல்லப்பட்ட செய்தி கேட்ட மாத்திரத்திலேயே நமக்கு நெஞ்சம் பதறுகிறது. அந்தக் குடும்பத்தினரும், உற்றார் உறவினரும் எவ்வளவு துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகி இருப்பார்கள் என்பதை கற்பனை செய்யவே முடியவில்லை.

இந்தத் துயரமான வேளையிலும், துப்பாக்கிச் சூட்டில் தப்பி வந்தவர்களை காஷ்மீர் இஸ்லாமிய இளைஞர்கள் பாதுகாத்து அழைத்துச் சென்றனர் என்ற செய்தி மனதுக்கு ஒரு வகையில் ஆறுதல் அளிக்கிறது.

தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசும், தமிழகமும் பக்கபலமாக துணை நிற்கும் என்று அறிக்கை தந்துள்ளார்.

காஷ்மீர் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் அனைத்து அரசியல் கட்சிகளும் மத்திய அரசுக்கு துணையாக நிற்கும் என்ற உணர்வை வெளிப்படுத்தி உள்ளன. இந்தப் படுகொலையில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத்தை இரும்பு கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்: ஜக்கி வாசுதேவ்



கோவை, ஏப்.25ற்

சத்குரு ஜக்கி வாசுதேவ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 வெளிநாட்டினர் உள்பட 26 அப்பாவி பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. பயங்கரவாதத்தின் நோக்கம் போர் அல்ல, ஆனால் ஒரு சமூகத்தை அச்சத்தால் முடக்குவது. பீதியைப் பரப்புவதும், சமூகத்தைப் பிளவுபடுத்துவதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தடம் புரளச் செய்வதும், ஒவ்வொரு மட்டத்திலும் சட்டமின்மையை உருவாக்குவதும் தான் அதன் நோக்கமாகும்.

நம் தேசத்தின் இறையாண்மையை பாதுகாக்கவும், வளர்க்கவும் விரும்பினால், பயங்கரவாதத்தை இரும்புக் கரத்துடன், உறுதியான நீண்டகால தீர்மானத்துடனும் கையாள வேண்டும். கல்வி, பொருளாதாரம், சமூக நலன் என அனைத்து மட்டங்களிலும் அனைவருக்கும் சம பங்கீடு வழங்குவது நீண்ட கால தீர்வை கொடுக்கும்.

ஆனால், இப்போதைக்கு, மதம், சாதி, அல்லது அரசியல் தொடர்புகள் ஆகியவற்றின் அனைத்து குறுகிய பிளவுகளுக்கும் அப்பால் ஒரு தேசமாக ஒன்றாக நிற்பதும், நமது பாதுகாப்புப் படைகளுக்கு அவர்களின் கடமைகளைச் செய்ய அனைத்து மட்டங்களிலும் ஆதரவளிப்பதும் மிகவும் முக்கியமானது. இங்கு தாக்குதலில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்த அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கல்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடியிருப்பு பகுதியில் படுத்து தூங்கிய காட்டு யானை



நீலகிரி, ஏப்.25

நீலகிரி மாவட்டம் மசினகுடி ஊராட்சி, முதுமலை புலிகள் காப்பகத்தின் கரையோரம் உள்ளது. அங்குள்ள சிங்காரா நீர் மின் நிலைய பகுதியில் காட்டு யானைகள் உள்ளன. இந்த நிலையில், சம்பவத்தன்று இரவு வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டு யானை, சிங்காரா குடியிருப்பு பகுதியில் நுழைந்தது.

இதனால் அச்சமடைந்த பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கினர். அதிகாலை 3 மணிக்கு சத்தம் கேட்டு பொதுமக்கள் வெளியே வந்து பார்த்தனர். அப்போது வீட்டின் முன்பு புல்மைதானத்தில்காட்டு யானை படுத்து தூங்கி கொண்டிருந்ததை கண்டு திடுக்கிட்டனர். மேலும் மனிதர்களை போல் படுத்து தூங்கி கொண்டிருந்த காட்டு யானையை விரட்ட மனம் இல்லாமல் அப்பகுதி மக்கள் இருந்தனர்.

காட்டுக்குள்தூங்குவது போர் அடித்து விட்டது என்பது போல பொதுமக்கள் குடியிருப்பு பகுதியில் யானை நீண்ட நேரமாக தூங்கி கொண்டிருந்தது. பின்னர்அதிகாலை 5 மணிக்கு தூக்கத்தில் இருந்து விழித்து மெதுவாக எழுந்தது. தொடர்ந்து உடல் சோம்பலை முறித்தபடி வனப்பகுதிக்குள் காட்டு யானை நடந்து சென்றது. இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

25.4.2025

# அமலாக்கத்துறையின் சோதனையை எதிர்த்து டாஸ்மாக் நிர்வாக இயக்குனர் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

சென்னை, ஏப்.25

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த மாதம் 6ந் தேதி முதல் 8ந் தேதி வரை அமலாக்கத் துறை நடத்திய சோதனை சட்டவிரோதமானது என்று அறிவிக்கக்கோரி சென்னை ஐகோர்ட்டில், டாஸ்மாக் நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் விசாரித்து வருகின்றனர். இந்த வழக்கு விசாரணையின்போது, தமிழ்நாடு அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன், டாஸ்மாக் தரப்பில் மூத்த வக்கீல் விக்ரம் சவுத்ரி ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். அவர்கள் தங்கள் வாதத்தில், ''அமலாக்கத்துறை வெளிப்படையாக இருப்பதுபோல ஒரு பிம்பத்தை உருவாக்கி அதன் பின்னால் மறைந்துக்கொள்கிறது. எதற்காக சோதனை செய்கிறோம் என்பதை அமலாக்கத்துறை தெரிவிக்க வேண்டும்.

அமலாக்கத்துறையின் நடவடிக்கையால் நேரடியாக டாஸ்மாக்கின் நற்பெயருக்கும், மறைமுகமாக அரசின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.

2007ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை முறைகேடு நடந்ததாக கூறப்படும் நிலையில், தற்போதுதான் ஞானம் வந்ததுபோல அமலாக்கத் துறை விசாரணை நடத்தியுள்ளது. விசாரணை என்ற பெயரில் பெண் அதிகாரிகள் உள்ளிட்டோரை அமலாக்கத்துறை கொடுமை செய்துள்ளனர்'' என்று தெரிவித்தனர்.

அமலாக்கத்துறை சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜு, 'மாநில போலீசார் பதிவு செய்த லஞ்ச வழக்குகளின் அடிப்படையில்தான் அமலாக்கத்துறை விசாரணை நடத்தியுள்ளது. சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்திருப்பதாக கருதினால் அமலாக்கத்துறை விசாரணை நடத்தலாம். டாஸ்மாக் ஊழியர்கள் சிலர் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக தகவல் கிடைத்ததால் டாஸ்மாக் அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டது.

டாஸ்மாக் முறைகேடு மூலம், ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்தது சோதனையில் தெரியவந்துள்ளது'' என்று வாதிட்டார்.

இந்த வழக்கு இறுதிக்கட்ட விசாரணைக்காக நீதிபதிகள் முன்பு விசாரணைக்கு வந்தது. டாஸ்மாக் தரப்பில் மூத்த வக்கீல் விகாஸ்சிங் வாதம் செய்தார். அவர், 'அமலாக்கத்துறைக்கு சோதனை நடத்த அதிகார வரம்பு இல்லை. மிகப்பெரிய ஊழல் நடைபெற்றதாக அமலாக்கத்துறை எவ்வாறு சொல்ல முடியும்?' என்று வாதிட்டார். அமலாக்கத்துறை தரப்பில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாதிடப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததையடுத்து இன்று (புதன்கிழமை) தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிபதிகள் அறிவித்தனர்.

# புத்தர் கோவில் விவகாரம்: தனி நீதிபதி உத்தரவுக்கு ஐகோர்ட்டு தடை



சென்னை, ஏப்.25

சேலம் பெரியேரி தலைவெட்டி முனியப்பன் திருக்கோவில் ஒரு புத்த மத வழிபாட்டு தலம் என்ற தனி நீதிபதி ஆனந்த் வெங்கடேஷின் தீர்ப்புக்கு சென்னை ஐகோர்ட்டின் இருநீதிபதிகள் பெஞ்ச் நேற்று தடை விதித்து உத்தரவிட்டது.

முன்னதாக சேலம் அரசு மருத்துவமனைக்கு எதிரே பெரியேரி கிராமம், கோட்டை சாலையில் அமைந்திருக்கும் தலைவெட்டி முனியப்பன் திருக்கோவில் தொடர்பான வழக்கு சென்னை ஐகோர்ட்டு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, ''தலைவெட்டி முனியப்பன் திருக்கோவில் அல்ல. அது புத்தர் கோவில். இதில் இந்து சமய அறநிலையத் துறைக்கு எந்த ஒரு உரிமையும் இல்லை'' என்று தீர்ப்பு அளித்தார். இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலாளர், கமிஷனர் சார்பாக மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது அறநிலையத் துறை சார்பில், ''கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு மேலாக தலைவெட்டி முனியப்பன் என்றே வழிபாடு நடைபெறுகிறது. பூஜைகளும் செய்யப்பட்டு வருகிறது. 1991ம் ஆண்டு இயற்றப்பட்ட வழிபாட்டு தலங்கள் சட்டப்படி 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ந்தேதி அன்றைய தினத்தில் வழிபாட்டு தலமாக இருக்கும் எந்த ஒரு கோவிலையும் மாற்றம் செய்ய இயலாது. அதனால், ரிட் வழக்கில் தலைவெட்டி முனியப்பன் கோவிலை புத்தர் கோவில் என்று உத்தரவு பிறப்பிக்க இயலாது'' என்று வாதிடப்பட்டது.

இதனை ஏற்ற நீதிபதிகள், மேல்முறையீட்டு வழக்கினை ஏற்றுக்கொண்டு, தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவிற்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர்.

# மரணமடைந்த கிராம உதவியாளர்கள் வாரிசுகளுக்கு பணி வழங்க உத்தரவு: அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்

சென்னை ஏப்.25

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேசிய, சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, வருவாய் துறையில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள் வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்களா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த வருவாய்த்துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர்.ராமசந்திரன், "பணி நியமனம் செய்யும் போதே சிறப்பு காலவரைமுறை ஊதியத்தில் தான் பணி நியமனம் செய்துள்ளனர். வருவாய்த்துறையில் மட்டும் அல்ல மற்ற துறைகளிலும் இதே நிலைதான்.

முதல்அமைச்சரிடம் பேசி கால முறை ஊதியத்தினை மாற்றுவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

இதுவரை கிராம உதவியாளர்கள் மரணம் அடைந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு பணி வழங்கப்படுவது இல்லை. 10 நாட்களுக்கு முன்பாக கிராம உதவியாளர்கள் மரணம் அடைந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு பணி வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

# ஓட்டலில் இறைச்சி உணவில் கரப்பான் பூச்சி; வாடிக்கையாளர் அதிர்ச்சி



கன்னியாகுமரி ஏப்.25

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் மார்க்கெட் ரோடு பகுதியில் ஒரு ஓட்டல் உள்ளது. இந்த ஓட்டலுக்கு மார்த்தாண்டம் அருகே உள்ள கண்ணக்கோட்டையை சேர்ந்த ஒருவர் நேற்று காலை சாப்பிடச் சென்றார். அங்கு அவர் பீப் இறைச்சி உணவை வாங்கி சாப்பிட தொடங்கினார்.

அப்போது அதில் கரப்பான் பூச்சி கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே அவர், அதை ஓட்டல் நிர்வாகத்திடம் காட்டி கூறினார். ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை. பின்னர் அவர் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

விரைந்து வந்த அதிகாரிகள் ஓட்டலில் சோதனை நடத்தினர். அப்போது ஓட்டல் சமையல் அறை மிகவும் சுகாதாரமற்ற நிலையில் இருந்தது. மேலும், காலாவதியான உணவு பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து சுகாதாரமற்ற முறையில் செயல்பட்ட அந்த ஓட்டலுக்கு அதிகாரிகள் 'சீல்' வைத்தனர்.

மேலும், ஓட்டல் உரிமையாளருக்கு ரூ.10 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது.

# 7ம் வகுப்பு மாணவியை தோப்புக்கரணம் போடவைத்த ஆசிரியைக்கு ரூ.2 லட்சம் அபராதம்

சிவகங்கை, ஏப்.25

சிவகங்கையில் வீட்டுப்பாடம் செய்யாமல் பள்ளிக்கு வந்த 7ம் வகுப்பு மாணவியை 400 முறை தோப்புக்கரணம் போட வைத்த அரசுப் பள்ளி ஆசிரியை சித்ராவிற்கு ரூ.2 லட்சம் அபராதம் விதித்து மாநில மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் தொடர்ந்த வழக்கில், அபராத தொகையை ஆசிரியை சித்ராவிடம் இருந்து வசூலிக்கவும், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் தமிழ்நாடு அரசுக்கு மனித உரிமை ஆணைய உறுப்பினர் கண்ணதாசன் பரிந்துரைத்துள்ளார்.

# ஆன்லைன் மோசடியில் ஈடுபட்ட 14 பேர் கைது; சைபர் கிரைம் போலீசார் அதிரடி

சென்னை ஏப்.25

சமூக வலைத்தளங்களில் வரும் மோசடியான விளம்பரம் மற்றும் ஆசை வார்த்தைகளை நம்பி யாரும் ஏமாற வேண்டாம் என்று தமிழக போலீஸ் துறையின் மாநில சைபர் கிரைம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், கடந்த ஒருவாரத்தில் தமிழகத்தில் ஆன்லைன் மோசடியில் ஈடுபட்ட 14 பேரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்துள்ளனர். அதன்படி, சென்னையை சேர்ந்த டாக்டரிடம் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தருவதாக ரூ.88 லட்சம் மோசடி செய்த சென்னை வளசரவாக்கம் பகுதியை சேர்ந்த சஹாபுதீன் (வயது 44), கே.கே.நகரை சேர்ந்த முகமது உஸ்மான் (67), முகமது முனாவர் (41),

அவரது மனைவி ஜமீலத் நசீரா (34) கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சேர்ந்த சாஹித் அப்ரிடி (27), வஜபுல்லா (50), அவரது மனைவி பாத்திமா (45), ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர் முஷ்டாக் அகமது (24) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கல்வி உதவித்தொகை பெற்றுத்தருவதாக மாணவ, மாணவிகளை குறிவைத்து மோசடியில் ஈடுபட்டதாக டெல்லியை சேர்ந்த ஆஷூ குமார் (29), அனுஜ் குமார்ஜா (21), சுபம் குமார் (22) ஆகிய 3 பேரை கைது செய்தனர். தஞ்சாவூர் போலீசார் டெல்லி சென்று குற்றவாளிகளை கைது செய்தனர்.

மும்பை போலீஸ் என கூறி ரூ.2,725 கோடி மோசடி செய்து விட்டதாக வேலூரை சேர்ந்தவரை மிரட்டி, டிஜிட்டல் கைது செய்து பணம் பறித்த கேரளாவைச் சேர்ந்த அகில், ஆஷிக், முகமது அஜ்மல் ஆகிய 3 பேரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 14 பேரும் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# 'டூரிஸ்ட் பேமிலி' படத்தின் டிரெய்லர் வெளியானது




'அயோத்தி, கருடன், நந்தன்' உள்ளிட்ட வெற்றிப்படங்களையடுத்து சசிகுமார் தற்போது நடித்துள்ள படம் 'டூரிஸ்ட் பேமலி'. இந்த படத்தை 'குட் நைட்' படத்தினை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் தயாரிக்கிறது. அபிஷன் ஜீவிந்த் இயக்கும் இந்தப் படத்தில் சிம்ரன் கதாநாயகியாக நடித்துள்ளார்.

யோகி பாபு, எம்.எஸ்.பாஸ்கர், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியானது. அதில் இலங்கைத் தமிழர்களாக நடித்துள்ள சசிகுமார் சிம்ரனின் இலங்கை தமிழ் பேச்சு ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

இப்படம் வருகிற மே 1ந் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், தற்போது இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது.

# அதிக சிக்சர்கள்...ரோகித் சர்மா புதிய சாதனை



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இன்று ஐதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச ஸ்டேடியத்தில் நடைபெற்ற 41வது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் சன் ரைசர்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து ஐதராபாத் அணி முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் ஐதராபாத் அணி 8 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து 144 ரன்கள் என்ற இலக்கை நோக்கி மும்பை அணி விளையாடியது. 15.3 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு மும்பை அணி 146 ரன்கள் எடுத்தது. இதனால் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது . அதிகபட்சமாக ரோகித் சர்மா( 8 பவுண்டரி, 3 சிக்சர் ) 70 ரன்கள் எடுத்தார்.

இந்த நிலையில், இந்த போட்டியில் 3 சிக்சர்கள் அடித்த ரோகித் சர்மா புதிய சாதனை படைத்துள்ளார். அதன்படி மும்பை அணிக்காக அதிக சிக்சர்கள் (259) அடித்த வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா படைத்துள்ளார். பொல்லார்டு (258) சிக்சர்கள் 2வது இடத்தில் உள்ளார் .

# 'குட் பேட் அக்லி' படம் இளையராஜாவால் ஓடவில்லை அப்பா கங்கை அமரனுக்கு பிரேம்ஜி பதிலடி



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித்குமார் நடிப்பில் கடந்த 10ம் தேதி வெளியான படம் 'குட் பேட் அக்லி'. பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியான இந்த திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கங்கை அமரன், தங்கள் பாடல்தான் 'குட் பேட் அக்லி' படத்தை ஜெயிக்க வைத்ததாக கூறினார். அதாவது, ரூ.7 கோடி சம்பளம் கொடுத்து இசையமைப்பாளர் வைத்திருக்கிறீர்கள். அவர் போட்ட பாடலுக்கு கைத்தட்டல் விழாமல் எங்கள் பாடலுக்கு விழுகிறது. இளையராஜாவின் இசையில் உருவான பாடல்கள், குட் பேட் அக்லி படத்தில் இடம்பெற்றதால் இப்படம் வெற்றிப் படமாக மாறியது என கங்கை அமரன் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து நடிகரும் கங்கை அமரனின் மகனுமான பிரேம்ஜி பதிலளித்துள்ளார். அதாவது, ''எனது அப்பா பேசியது, அவரது அண்ணனுக்கு ஒரு பிரச்சினை என்ற போது அவரது அண்ணனுக்கு ஆதரவாக பேசியுள்ளார். அதேபோல நான் எனது அண்ணனுக்கு ஒரு பிரச்சினை என்றால் பேசுவேன் அல்லவா. இளையராஜாவால்தான் படம் ஓடியது என அவர் சொன்னதாக கேட்கிறீர்கள். அதெல்லாம் சும்மா. உண்மை என்பது அனைவருக்கும் தெரியும். குட் பேட் அக்லி படம் ஹிட் ஆனதற்கு அஜித் தான் முழு காரணம். அதுதான் நிஜம்'' என்று தெரிவித்துள்ளார்.

# ஐதராபாத் அணிக்கு எதிரான வெற்றி....மும்பை கேப்டன் கூறியது என்ன ?




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இன்று இரவு (புதன்கிழமை) ஐதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச ஸ்டேடியத்தில் நடைபெற்ற 41வது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் சன் ரைசர்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடின.இதில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து ஐதரபாத் அணி முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் ஐதராபாத் அணி 8 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து 144 ரன்கள் என்ற இலக்கை நோக்கி மும்பை அணி விளையாடியது. 15.3 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு மும்பை அணி 146 ரன்கள் எடுத்தது. இதனால் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது .

இந்த நிலையில், வெற்றி தொடர்பாக பேசிய மும்பை கேப்டன் ஹர்திக் பாண்டியா கூறியதாவது,

இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. வீரர்கள் சரியான வழியில் விளையாடுவது மகிழ்ச்சி.ரோகித் சர்மா , போல்ட், தீபக்சஹர், சூர்யகுமார், அனைவரும் சிறப்பாக விளையாடினர், கேப்டன் பதவி என்பது சில நேரங்களில் உள்ளுணர்வைப் பற்றியது, எப்போதும் முன்பே தயாரிக்கப்பட்ட திட்டங்களை நம்பியிருக்க மாட்டேன். எல்லா துறைகளிலும் சிறப்பாகச் செயல்பட முடியும், ஆட்டத்தில் மிகவும் புத்திசாலியாக இருப்பது பற்றி விவாதித்தோம். ஒவ்வொரு ஆட்டத்திலும் அதை எடுத்துக்கொள்வோம். இந்த வெற்றியில் நாங்கள் மிகவும் திருப்தி அடைகிறோம். என தெரிவித்தார் .

# 'அயோத்தி' படத்தால் எனக்கே தெரியாமல் ஒரு நல்லது நடந்திருக்கிறது சசிகுமார்



நடிகர் சசிகுமார் நடிப்பில் கடந்த 2023ம் ஆண்டு வெளியான படம் 'அயோத்தி'. இந்த படத்தினை இயக்குனர் மந்திர மூர்த்தி இயக்கியுள்ளார். இந்த படத்தில் 'குக் வித் கோமாளி' புகழ், ப்ரீத்தி அஸ்ராணி, யாஷ்பால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்த படத்தில், உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் வசிக்கும் குடும்பத்தினர் ராமேஸ்வரத்திற்கு சுற்றுலா வருவார்கள். அப்போது விபத்து நடந்து அதில் ஒருவர் உயிரிழந்து விடுவார். நடிகர் சசிகுமார் உயிரிழந்தவரின் உடலை விமானம் மூலம் அவர்களது சொந்த ஊருக்கு கொண்டு செல்ல உதவி செய்வார். இதுதான் இப்படத்தின் கதைக்களமாகும்.

இந்த நிலையில், நடிகர் சசிகுமார், 'டூரிஸ்ட் பேமிலி' படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார். அப்போது பேசிய சசிகுமார், "அயோத்தி படத்தால், விமானத்தில் உடலை கொண்டு செல்வதற்கு தேவையான நடைமுறைகள் எளிமையாக மாறியுள்ளது. அதற்காக, ரூ. 1 லட்சம் வரை மானியமும் கொடுக்கிறார்கள், இதனால் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளதாக என்னிடம் ஒருவர் கூறினார். எனக்கே தெரியாமல் ஒரு நல்லது நிகழ்ந்திருக்கிறது" என்று அந்த நிகழ்ச்சியில் பேசியுள்ளார்.

# அடுத்து வரும் ஆட்டங்களில் சென்னை அணி சிறப்பாக செயல்படும்: காசி விஸ்வநாதன் நம்பிக்கை



சென்னை அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில் மோசமான தொடக்கம் கண்டு வருகிறது. காயம் காரணமாக கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் பாதியில் விலகிய நிலையில் கேப்டன் பொறுப்பை டோனி ஏற்றார். அவரது தலைமையிலும் அணியின் செயல்பாட்டில் முன்னேற்றம் இல்லை. இதுவரை 8 ஆட்டங்களில் ஆடி 2 வெற்றி, 6 தோல்வியுடன் புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் இருக்கும் சென்னை அணி இனிவரும் எல்லா ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் தான் 'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெற முடியும்.

இந்த நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமை செயல் அதிகாரி காசி விஸ்வநாதன் நேற்று அளித்த ஒரு பேட்டியில்,

'இந்த சீசனில் நாங்கள் எங்களுடைய திறமைக்கு ஏற்ப விளையாடவில்லை. நாங்கள் முன்னேற்றம் காண முயற்சிக்கிறோம். அடுத்து வரும் ஆட்டங்களில் சிறப்பாக செயல்பட முயற்சிப்போம். இது ஒரு போட்டி தான். மற்றபடி நாங்கள் மோசமான நிலையில் இருப்பதாக ஒருபோதும் நினைக்கவில்லை. சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகம் அது மாதிரியானது இல்லை. ஒரு அணியாக நாங்கள் நன்றாக விளையாட வேண்டும். டோனி தலைமை ஏற்ற பிறகும் எதுவும் மாறவில்லை என்று அவரை மட்டும் குறை சொல்ல முடியாது. அணிக்கு எது நல்லதோ அதனை டோனி செய்வார். நிர்வாகியாக நாங்கள் சென்னை அணியிடம் இருந்து சிறந்த செயல்பாட்டை எதிர்பார்க்கிறோம். அணியை விமர்சிப்பது எங்களுடைய வேலையில்லை' என்றார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.